**OPEN ACCESS**

Manuscript ID: TAM-10042026-10710

Volume: 10

Issue: 4

Month: April

Year: 2026

P-ISSN: 2454-3993

E-ISSN: 2582-2810

Received: 14.02.2026

Accepted: 25.03.2026

Published: 01.04.2026

Citation: Balakrishnan, M. "Influence of Tamil Literature on Siddhars Conceptualization of Religion and Caste." *Shanlax International Journal of Tamil Research,* vol. 10, no. 4, 2026, pp. 7–15.

DOI: https://doi.org/10.34293/tamil.v10i4.10710

*Corresponding Author: balutamizh1880@bdu.ac.in

This work is licensed under a Creative Commons Attribution-ShareAlike 4.0 International License

# Influence of Tamil Literature on Siddhars Conceptualization of Religion and Caste

**M. Balakrishnan**

*Associate Professor, Department of Tamil*

*Centre for Distance and Online Education, Bharathidasan University*

*Tiruchirappalli*

*http://orcid.org/0009-0007-1678-9949*

**Abstract**

*Literary contributions of Siddhars are significant and hence worth mentioning in the literary history of Tamil Nadu. Siddhars were the one who proposed alternative progressive traditions in place of the prevailing obsolete, regressive and decaying social norms. Among the various problems prevailing then, religion and caste were the most destructive. Though evolving into a socially and morally defined human from incipient animal, his religious and caste based ideas, notions and actions were primitive. It is in this context, conceptualization and literary preaching of Siddhars rescued the caste and communally divided society. Hence they are social activists, rabble rousers and rationalist who eradicated superstitions. They proposed progressive ideas against traditional regressive ideas. Siddhars, who identifies God within an individual, have awakened people who were drowned in darkness of ignorance until then. They opposed religious, caste and ritual based misconceptions and superstition. There is no doubt that the Siddhars were the first to record progressive ideas and revolutionalise the Tamil literary world. As per Sivavakkier, a renowned Siddahar, birth of an individuals do not arise from his right to be born, neither it is due the rights of his parent. The Birth as an act or event cannot be stopped or changed by the individual being born. Thus being classified as inferior or superior creation based on birth is ignorance. It is only when one grows up one takes ownership and responsibility for his action. Thus the appropriate thought is that a person should not be respected because of his birth, but should be respected according to his characters and morals. This articles describes such noble Siddhar thoughts and preaching in detail.*

***Keywords:*** *Siddhar, Social, Caste, Traditional, Ritual, Religion*

**References**

1. Anand Ravisastri K.A, siddharkalin samuthayach Sinthanaikal, Pavai publishers, Chennai-2000.
2. Bakthavachalabharathi, Cultural Anthropology, Manivasakar Publishers, Chennai -2001.
3. Hulton.J.H, Caste in India, Oxford University Press, Bompay -1973.
4. Kailasapathi. K, Oppiyal Ilakkiyam, Pari Nilayam, Chennai -1990.
5. Tamilppriyan, Siddthar Padalkal, Karpagam Puthakalayam, Chennai -2016.

# தமிழிலக்கியச் சிந்தனைப்போக்கில் சித்தர்களின் சமயம் மற்றும் சாதியம் குறித்த சிந்தனைகள்

*மூ. பாலகிருஷ்ணன்*
இணைப் பேராசிரியர், தமிழ்த்துறை
தொலைநிலை மற்றும் இணையவழிக் கல்வி மையம்
பாரதிதாசன் பல்கலைக்கழகம், திருச்சிராப்பள்ளி

***ஆய்வுச் சுருக்கம்***

*தமிழக இலக்கிய வரலாற்று மரபில் சித்தர் இலக்கிய மரபு குறிப்பிடத் தக்கதாகும். அழுகிப் புரையோடிக் கிடந்த சமூக மரபுகளைக் கேள்விக்கு உட்படுத்தி மாற்று மரபுகளை முன்வைத்தவர்கள் சித்தர்கள். சமுதாயம் பல்வேறு சிக்கல்களால் கட்டுண்டு கிடந்தது. அவற்றுள் சமயமும் சாதியும் முக்கியச் சிக்கல்களை உருவாக்கின. சமயம், சாதி சார்ந்த கருத்துக்களின் பிடியில் இருந்து மக்களை மீட்டவர்கள் சித்தர்கள். இவர்கள் சமூகப் போராளிகளாகவும் கலகக்குரல் எழுப்புவோராகவும் மூடநம்பிக்கைகளை ஒழிக்கும் பகுத்தறிவாளர்களாகவும் இருந்துள்ளனர். வழிவழியாகச் சொல்லப்பட்டுவந்த மரபுசார்ந்த இயக்கச் சிந்தனைகளை எதிர்த்து, அவற்றிற்கு எதிராக முற்போக்குச் சிந்தனைகளை முன் வைத்தவர்கள். சித்தர்கள் இறைவனை உள்ளுக்குள் பார்த்தவர்கள். அறியாமை இருளில் மூழ்கிக் கிடந்த மக்களுக்கு ஒளியூட்டி மீட்டெடுத்தவர்கள் சித்தர்கள். சமயம். சாதி, சடங்கு. கடவுள் குறித்த மூடநம்பிக்கைகளை எதிர்த்து கலகக்குரல் எழுப்பியவர்கள் சித்தர்களே ஆவார். ஒருவன் பிறப்பதற்கு முன்னமே பிறப்புக்கு உரியவனின் உரிமையால் நிகழவில்லை. பிறப்பிற்குரியவனின் பெற்றோரின் உரிமையாலும் நிகழவில்லை. பிறப்பு எனும் செயலைச் செய்யவோ. மாற்றவோ. நிறுத்தவோ பிறப்பிற்குரியவனுக்கு உரிமையில்லை என்பதை அறியமுடிகிறது. இதனால் பிறப்பினால் எந்தச் சாதியில் பிறந்தார் என்று கூறி உயர்வு தாழ்வு கற்பிப்பது அறிவீனமான செயலாகும். வளரும் போது மட்டும் தான் ஒருவன் தனது செயலுக்கு உரிமையும் பொறுப்பும் ஏற்கிறான். இதனால் மனிதனின் பிறப்பின் காரணமாக மதிக்கப்படாமல் அவனது பண்பு. ஒழுக்கம் ஆகியவற்றைக் கொண்டே மதிக்கப்பட வேண்டும் என்பதே பொருத்தமான சிந்தனையாகும். இதுபோன்ற சித்தர்களின் சிந்தனைகளை இக்கட்டுரை விவரிக்கிறது.*

***முக்கியச் சொற்கள்:*** *சித்தர், சாதி, சமயம், சமூகம், முற்போக்கு, சடங்கு, கடவுள்*

## முன்னுரை

தமிழக இலக்கிய வரலாற்று மரபில் சித்தர் இலக்கிய மரபு குறிப்பிடத் தக்கதாகும். அழுகிப் புரையோடிக் கிடந்த சமூக மரபுகளைக் கேள்விக்கு உட்படுத்தி மாற்று மரபுகளை முன்வைத்தவர்கள் சித்தர்கள். சமுதாயம் பல்வேறு சிக்கல்களால் கட்டுண்டு கிடந்தது. அவற்றுள் சமயமும், சாதியும் முக்கியச் சிக்கல்களை உருவாக்கின. விஞ்ஞானம் உலகையே சுருக்கி கைக்குள் கொண்டு வந்துவிட்டது. விலங்காய்ப் பிறந்து மனிதனாய் பரிணாமம் பெற்றவன் சமயத்தையும் சாதியையும் முன்னிறுத்தி விலங்குநிலையில் இருந்து மாறாமல் இருக்கிறான். இத்தகைய சாதி, சமயம் சார்ந்த கருத்துக்களின் பிடியில் இருந்து மக்களை மீட்டவர்கள் சித்தர்கள். இவர்கள் சமூகப் போராளிகளாகவும் கலகக்குரல் எழுப்புவோராகவும் மூடநம்பிக்கைகளை ஒழிக்கும் பகுத்தறிவாளர்களாகவும் இருந்துள்ளனர். வழிவழியாகச் சொல்லப்பட்டு வந்த மரபு சார்ந்த இயக்கச் சிந்தனைகளை எதிர்த்து, அவற்றிற்கு எதிராக முற்போக்குச் சிந்தனைகளை முன் வைத்தவர்கள். சித்தர்கள்

இறைவனை உள்ளுக்குள் பார்த்தவர்கள். அறியாமை இருளில் மூழ்கிக்கிடந்த மக்களுக்கு ஒளியூட்டிமீட்டெடுத்தவர்கள் சித்தர்கள். சமயம். சாதி, சடங்கு. கடவுள் குறித்த மூடநம்பிக்கைகளை எதிர்த்து கலகக்குரல் எழுப்பியவர்கள் சித்தர்களே ஆவார். தமிழ் இலக்கிய உலகில் முற்போக்குச் சிந்தனைகளை முதன்முதலாகப் பதிவு செய்து புரட்சி செய்தவர்கள் சித்தர்கள் என்பதில் ஐயமில்லை. சித்தர்களின் பாடல்களில் வெளிப்பட்டுள்ள சமயம் மற்றும் சாதி குறித்த கருத்துக்களை எடுத்து விளக்குவதாகவே இவ்ஆய்வுக் கட்டுரை அமைகிறது.

### சமயம் குறித்த சிந்தனைகள்

மக்களின் வாழ்க்கை முறைகளைச் செம்மைப்படுத்தி அவர்களை நல்வழிப்படுத்த சான்றோர்களால் மைக்கப்பட்டதே சமயமாகும். சமயம் மனிதரை நெறிப்படுத்துவது முறைப்படுத்துவது ஆகும். இதனை. "இறை வழிபாட்டுக் கொள்கையை முறைப்படுத்தி மனித மனத்தைச் செம்மைப் படுத்துவதே சமயம் ஆகும். சமயம் என்ற சொல்லுக்கு பக்குவப்படுதல். பக்குவப்படுத்துதல் என்பது பொருளாகும்" என்று குன்றக்குடி அடிகளார் குறிப்பிடுகிறார். "சமயம் என்பது வாழ்க்கைமுறை. அதாவது மனிதனை நெறிப்படுத்தி உள்ளத்தைப் பக்குவப்படுத்தும் கருவியாகச் சமயம் திகழ்கின்றது. அவன் குறை நீக்கத்திற்கும், நிறை நலத்திற்கும் சமயம் இன்றியமையாததாகும்" என்று விளக்கம் தருகிறார் பெ. சுயம்பு. எனவே, சமயம் என்பது மக்களை நல்வழிப் படுத்தும் சமூக நிறுவனமாகத் திகழ்ந்துள்ளது. சமயங்களின் வளர்ச்சியும் சமயவாதிகளின் ஆதிக்கமும் சமயங்களின் இயல்பை மாற்றி இருக்கிறது.

சமயங்கள் பலவாகத் தோன்றியமைக்குச் சமயவாதிகளே காரணமாவர். திருமூலர், ஆறுவகையான சமயவாதிகளும் தம் உள்ளத்தில் உறையும் இறைவனைக் காணவில்லை என்பதை,

**"ஆலயத்துள் நின்ற ஆறு சமயத்தோறும்**
**காயத்துள் நின்ற கடவுளைக் காண்கிலர்"**

வரிகளால் புலப்படுத்துகிறார். மேலும் ஆறுவகையான சமயங்களுக்கு எனத் தனித் தனி சமயங்கள் முழுமுதற்கடவுள் என்ற இருந்ததையும் 'இந்தியாவில் சமயங்கள்' என்ற நூலில், சைவம் வைணவம் – திருமால், சாக்தம் – சக்தி, காணபதியம் – கணபதி, கௌமாரம் முருகன், சௌரம் – சூரியன் என ஆறு சமயமும் சமயக் கடவுளும் குறித்து பெ.சுயம்பு குறிப்பிடுகிறார். மேலும், சைவமும் வைணவமும் பல கிளைகளை உருவாக்கி மக்களைச் சமயவழிபாட்டு அடிப்படையில் பல் பிரிவுகளாகச் சிதற வேற்றரசர்களின் ஆட்சியினால் சமணம். பௌத்தம், கிறிஸ்த்துவம், இஸ்லாம் போன்ற சமயங்கள். பல் சமயங்களின் சமயப் பகைமைக்குக் காரணமாயின. இதனை, "புதிது புதிதாக பெருக்கமே உருவான சமயக்கிளைகள் மக்களைப் பிரித்து வைத்தோடு அவர்களிடையே பகைமை உணர்வையும் வளர்த்தது. தன் வழிபாட்டுத் தெய்வத்தை உயர்த்தி முதன்மையுறச் செய்யும் பொருட்டு ஒவ்வொரு சமயமும் பிற சமயத் தெய்வங்களைத் தாழ்த்தி இழிவுசெய்தன. சமயவாதிகளின் இந்த அணுகுமுறை ஒன்றுபட்டு வாழ வேண்டிய மக்களிடையே கசப்பு. வெறுப்பு, பகைமை, ஒற்றுமையின்மை ஆகிய வேண்டத்தகாத உணர்வுகளை வளர்த்தது" என்ற கருத்தினை க.ஆ.ஆனந்த ரவிசாஸ்திரி பதிவு செய்கிறார். சமயங்கள் மக்களை நல்வழிப்படுத்தத் தோன்றினும் பின் தன் சமயமே உயர்ந்தது. தன் கடவுளே உயர்ந்தவர் சக்தி வாய்ந்தவர் என்ற கருத்தாக்கங்களை நிலைநிறுத்திக் கொள்ள பல பொய்யான சடங்குகளையும் விதிமுறைகளையும் சமயவாதிகள் உருவாக்கி கொண்டனர் என்கிறார் திருமூலர்.

**"ஆனசமயம் அது இது நன்றெனும்**
**மாய மனிதர் மயக்க மதுவொழி**
**கானங் கடந்த கடவுளை நாடுமின்**
**ஊனங் கடந்த ஒருவது வாமே"**

திருமூலர், மனிதர்கள் சமயங்கள் நம்பாமல் போலித்தனமானவற்றைப் புறக்கணிக்க வேண்டும் என்றும் உண்மையான மெய்ப்பொருளைத் தேடித் தெளிவடையவும் அறிவுறுத்துகிறார். அனைத்துச் சமயங்களின் நோக்கமும் இறைவனை அடைவதே ஆகும். ஆனால் இறைவனை அடைவதற்கான வழிமுறைகளும் சடங்கு சம்பிரதாயங்களும் போலியான மதவாதிகள் உருவாக்கித் தந்தனவாகும். இதனால் மக்களிடையே பூசல்களும் போராட்டங்களும் உயர்வு தாழ்வுகளும் தோன்றி மக்களைப் பிளவுபடுத்தின. இதனால் சட்டைமுனி வேதாந்தம், சாத்திரம் என்பனவற்றில் கூறப்படும் சமயங்களைப் பொய் எனத் தள்ளுங்கள் என்கிறார். இதனை.

**"சமயமெல்லாம் சக்தியுண்டு சிவமுமுண்டு**
**சண்டாளர் பிரித்தல்லோ தள்ளினார்கள்**
**சமயமெல்லாஞ் வேதாந்தசித் தாந்தமுண்டு**
**சாதகத்தை பாராமற் தயங்கினார்கள்**
**சமயமெல்லாம் நாதமுண்டு விந்துமுண்டு**
**காக்காமற் கெட்டார்களு லகத்தோர்கள்**
**சமயமெல்லாம் அம்பரமாம் ஞானமுண்டு**
**தாயைவிட்ட பாவத்தால் தவறிப்போச்சே"**

என்ற பாடலில் சண்டாளர்களான சமயவாதிகளே சமயங்களைப் பிரித்துத் தள்ளினார்கள் என்கிறார். மேலும் சமயப் பொதுமையின் உண்மைத் தன்மையை பேசுகிறார். சமயங்களும் சாதிப்பிரிவுகளும் பகுத்தறிவு கொண்டவர்களுக்கு அல்ல. அறிஞர்களும் ஞானிகளும் பின்பற்றக் கூடியவை அன்று. மேலும் மனிதப் பண்புள்ளவர்களுக்குச் சமய, சாதி, பேதம் கிடையாது. என்பதை,

**"சமயபேதம் பலவான சாதிபேதங்கள்**
**சகத்தோர்க்கே அல்லாது சாதுகளுக்கோ"**

பாடலில் பாம்பாட்டிச்சித்தர் சமயவெறி மனிதர்களே கொண்ட வேற்றுமையும் சாதி வேற்றுமையும் பின்பற்றுவர் என்கிறார்.

**"சமய பேதமும் ஆசையடி கங்கா**
**ஸ்நான பூசையும் ஆசையடி**
**மமதையற்ற இருக்கின்ற மமதையை**
**வாழ்த்தி கும்மி யடியுங்கடி"**

என்ற பாடலில் சமய பேதங்கள் ஆசையின் காரணமாக வருவதாகும். மதப்பற்றின் காரணமாக மனிதர்கள் ஒருவரை ஒருவர் அடித்துக்கொள்ளும் மோதலை அன்றே வாலைச்சாமி சித்தர் உணர்த்தியுள்ளார். இதனையே. அகப்பேய்ச் சித்தரும்

**"சமய மாறுமடி -அகப்பேய்**
**தாமாக வந்தவடி**
**அமய நின்றவிடம் -அகப்பேய்**
**ஆராய்ந்து சொல்வாயே"**

என்று பாடுகிறார். சமயங்கள் அனைத்தும் மனிதனால் உருவாக்கப்பட்டவை. மகிழ்ச்சியான வாழ்க்கையும் இன்பத்தையும் நிறைவையும் பெறுவதற்காக மனிதன் ஒவ்வொரு சமயத்தையும் உருவமைத்துக் கொண்டான். சமயத்திற்குரிய கடவுள், பெயர், உருவம், இயல்பு. சடங்கு, சம்பிரதாயங்களையும் அவனே வரையறுத்துக்கொண்டான். இதில் கால மாற்றத்திற்கு ஏற்ப ஒவ்வொரு சமயமும் தங்களை நிலைநிறுத்திக்கொள்ள போராட்டங்களை ஏற்படுத்தி அப்பாவி மக்களைப் பலியாக்கின.

அரசியல் ஆதரவும் சமுதாய ஆதிக்கமும் பெற சமயங்கள் தங்களுக்குள் போட்டியிட்டுக் கொண்டன. 'மன்னனின் கருத்தையும் ஈடுபாட்டையும் தம்பால் கவர்ந்து கொள்வதற்கும் சமயங்கள் ஒன்றையொன்று முந்திக்கொள்ள முனைந்தன. போட்டியில் எச்சமயம் வெற்றி கண்டதோ அச்சமயத்தையே மன்னனும் மக்களும் பின்பற்றுவது வழக்கமாயிற்று'. சமயங்கள் வெற்றி அடைய பிற சமயத்தினரை வாதத்தில் வெற்றி பெறுவது மட்டுமின்றி உயிர்ப்பலிகளும் இருந்துள்ளன. இதனால்தான் சித்தர்கள் சமயங்களில் வேறுபாடு தேவையில்லை அனைத்துச் சமயங்களுமே பரம்பொருளை அடையவே வழிகாட்டுகின்றன என்றனர். இதன்வழி மக்களை ஒன்றுபடுத்தி அமைதியாக, அன்பாக வாழ நெறிப்படுத்த

வேண்டிய சமயங்கள். காலப்போக்கில் இயல்பை இழந்து, நோக்கத்தை மறந்து, மக்களைப் பிளவுபடுத்திச் சமூகச்சீர் குலைவை ஏற்படுத்தியதை அறிய இயலுகிறது. “சித்தர்கள் சமயத்துறையில் புரட்சிகரமான கருத்துக்களை முன்வைத்தனர். அடித்தட்டு மக்களின் புரட்சிக்கு வித்திட்டுள்ளார்கள். இதனை உண்மையில் சமயத்துறையில் சித்தர்கள் வெளிக்காட்டிய எதிர்ப்பு சமூகத்துறையில் இருந்த முரண்பாட்டின் விளைவேயாம்” என்ற க.கைலாசபதியின் கருத்தும் இங்கே ஒப்பு நோக்கத்தக்கது. சமயங்கள் யாவும் சமயவாதிகளால் ஏற்படுத்தப் பட்டன. எந்த மதமும் தானாகத் தோன்றவில்லை. சமயத்தின் தோற்றம் குறித்து. “மனிதனுக்கு மாயையான தொடர்ந்து சுகத்தை வழங்கி அவனைத் தன் மந்திரவலையில் வைத்து அவனை அடிமைப்படுத்தி வருகின்றன. இதனால்தான் மக்களின் யதார்த்தமான மகிழ்ச்சியை வழங்கி வருகிற மதத்தை வேண்டியிருக்கிறது” (கருத்தியல் சாதி மதம் பெண், ப.99) என்கிறார் மார்க்ஸ். எல்லா மதங்களும் இறைநம்பிக்கை. அன்பு. மனிதநேயத்தை வெளிப்படுத்தினாலும் தேவையில்லாத பலவற்றறையும் உருவாக்கினர். அவற்றை மாற்ற சித்தர்கள் முனைந்தனர். இதனை

**“வேறுபடும் சமயமெல்லாம் பகுத்து பார்க்கின்**
**விளங்கும் பரம்பொருளே நின் விளையாட்டல்லால்**
**மாறுபடும் கருத்தில்லை முடிவில் மோன வாரிதியின் நதித்திறன் போல் வயங்கிற்றம்மா**

என்ற பாடலில் தாயுமானவர் ஆறுகள் பலவானாலும் அவை சேருமிடம் கடல் அதுபோல சமயங்கள் பலவானாலும் அனைத்தும் ஓர் இறைவனையே சென்றடைகின்றன என்கிறார்.

**சொல்லும் சமயநெறிச் சுற்றுக்குள்ளே சுழலும்**
**அல்லல் ஒழிவது என்றைக்கு ஐயா**

என்ற பாடலில் சமயங்களில் சொல்லப்படும் பிரிவினைகளை ஒழிப்பது எப்பொழுது என்ற கேள்வி எழுப்புகிறார். இவர் சமயக் கொள்கையாம் சமரசக்கொள்கையை வலியுறுத்துகிறார். இராமலிங்க அடிகளார் கூறுகையில்,

**“கூறுகின்ற சமயம்எலாம் மதங்கள் எலாம் பிடித்துக்**
**கூவுகின்றார் பலன் ஒன்றும் கொண்டறியோர் வீணே**
**நீறுகின்றார் மண்ணாகி நாறுகின்றார் அவர்போல்**
**நீடுலகில் அழிந்துவிட நினைத்தேனோ?”**

என்ற பாடலில் சமயங்களால் எந்தப் பலனும் இல்லை. வீணே சண்டையிட்டு மக்கள் துன்பப்படுகின்றனர் என்பதை அறிவுறுத்துகின்றார். பயன் இல்லாத சமயத்தை விட்டொழியுங்கள் என்று அறைகூவினார் வள்ளலார்.

சமயத் துறையில் சித்தர்கள் புரட்சி செய்தமையால் சமயவாதிகளும் சைவ சித்தாந்தவாதிகளாலும் தூற்றப்பட்டனர். சுயநலம் கருதிய சமயவாதிகள், அரசியல் தலைவர்களால் மட்டுமே சமயச் சண்டைகள். வெறிச்செயல்கள், கொலைகள் நடக்கின்றன. இவையாவும் ஒரு சமயத்திற்கும் மற்ற சமயத்திற்கும் எதிராக நடப்பது அல்ல. மனிதருக்குள்ளே உள்ள பகையால் நடக்கும் நிகழ்வுகளாகும். சமயச்சண்டைகளுக்கும் சச்சரவுகளுக்கும் காரணம் பிறசமயங்களைப் பற்றிய அறியாமையும் தம் சமயமே உயர்ந்தது என்ற குறுகிய கண்ணோட்டமுமே ஆகும். சமயம் மனிதனது அச்சத்தையும் ஏக்கத்தையும் போக்கி அன்பையும் நம்பிக்கையையும் வேண்டும். அன்பை மட்டுமே வலியுறுத்தும். இவ்வகைச் சமயத்தையே சித்தர்கள் ஆக்க முனைந்தனர்.

### சாதி குறித்த சிந்தனைகள்

மனிதன் உலகிற்கு வரும்போதும் தனியாகத்தான் வருகிறான். போகும் போதும் தனியாகவேதான் போகிறான். ஆனால் இடைப்பட்ட காலத்தில் தனியாக வாழமுடியாமல் குடும்பமாக, குழுக்களாக, கூட்டங்கூட்டமாக வாழத் தொடங்குகிறான். இக்குழுக்கள் யாவும் பின்னர் சமூகங்களாக மாறுகின்றன. எல்லா கலாச்சாரங்களிலும் சமூகக் குழுக்கள் தொழில்கள், பழக்க வழக்கங்கள், நம்பிக்கைகள் போன்று சில பொதுவான அம்சங்களால் பிணைக்கப்பட்டுத் தங்களை அடையாளப்படுத்திக் கொள்கின்றன. இந்த அடையாளங்கள் பின்னாளில் சமூக அமைப்புகளின் சாதிகளாகப் பரிணாமம் பெற்றன. இந்தியச் சமுதாயம் சாதிக் குழுக்கள் என்ற அடுக்கமைப்பினால் கட்டப்பட்டுள்ளது. இந்த அடுக்கமைப்பிற்கு நீண்ட வரலாறு உண்டு. கி.மு. 1500இல் ஆரியர்கள் இந்தியாவிற்கு வந்தபோது மக்களிடையே எந்தவிதமான உடல்நிற வேறுபாடோ எவ்விதக்குழுக்களும் செயல்முறைகளும் இல்லை. ஆனால் ஆரியர்களின் வருகைக்குப் பிறகு இந்நாட்டு மக்களோடு கலக்காமல் உடல், நிறம், மொழி, சமயத்தில் வேறுபட்டு நின்றனர். இந்நாட்டு மக்களைத் தசுயூக்கள் அல்லது தாசர்கள் என்று குறித்தனர்" (Caste in India. 54) தமிழகத்தில் குடியேறிய வேதியர்கள் அரசியல் செல்வாக்குடன் தங்கள் பண்பாட்டினைப் பரப்பியதுடன் தமிழக மக்களை உடல், நிற மொழியால் இழிவுநிலைக்குத் தள்ளினர் என்று பக்தவத்சல பாரதி கருத்துரைக்கிறார்.

நால்வருண அமைப்பே இன்றைய பல்லாயிரக்கணக்கான சாதி அமைப்பு முறையின் முன்னோடியாகும். இன்று சாதிமுறைகளில் உயர்வு, தாழ்வு என்றும் மனச்சார் தீங்குகளையும் பல்வேறு அவலங்களையும் காண்கின்றோம். ஆனால் தொடக்கத்தில் நால்வருண முறையில் எவ்விதக் கட்டுபாடுமில்லை. ஒரு வருணத்தைச் சேர்ந்தார் பிற வருணத்தோடு தொழில்புரிய மண உறவு வைத்துக் கொள்வதில் எந்தவிதக் கட்டுப்பாடுகளும் இல்லை என்பதைப், "பலர்பல்வேறு தொழில்களில் ஈடுபட்டனர். பிராமணர்கள் வணிகத்திலும் சிற்பத் தொழிலிலும் ஈடுபட்டனர். சத்திரியர் பலர் வாணிகம் செய்துள்ளனர். சூத்திரர் என்னும் பிரிவில் வேற்றுமைகளும் புதுச்சாதிகளும் தோன்றின. தட்டார், தச்சர் போன்றோர் தம்முள் மணவுறவினால் கலந்தனர். எட்டாம் நூற்றாண்டுப் பாண்டியர் கல்வெட்டுக்களில் வைத்திய குலத்தார் அரசியலில் உயர்ந்த பதவிகளை வகித்தமைக் குறிக்கப்படும். இவர்கள் கலப்பு வகுப்பினர் என்பர். கரணர் என்னும் வகுப்பினர். வைசிய ஆடவர்க்கும் சூத்திரப் பெண்கட்கும் பிறந்தவர் என்பர். இவர்கள் கணக்கர்களாகப் பணியாற்றினர் என்பர் என்று அ. தட்சணாமூர்த்தி குறிப்பிடுகிறார். இதிலிருந்து ஆரம்ப காலத்தில் சாதி வேறுபாடு இன்றி அனைவரும் தொழில் செய்துள்ளனர். திருமண முறையிலும் கலப்புமணம் இருந்துள்ளதை அறியமுடிகிறது.

### சித்தர்களின் சாதி மறுப்புச் சிந்தனை

மனிதனின் முன்னேற்றத்தையும் மனிதத் தன்மையையும் மனிதனின் சாதியக் கொடுமைகள் தடுக்கிறது. ஒவ்வொருவரும் தொழில் செய்து பிழைப்பதற்காகவே சாதிகள் வகுக்கப்பட்டன. பின்னாளில் பிரிவுகளை ஏற்படுத்தி, ஏற்றத்தாழ்வுகளை உருவாக்கிக்கொண்டனர். சித்தர்கள் பிறப்பினால் சாதிகள் தோன்றுவதில்லை என்று வலியுறுத்தியுள்ளனர். மேலும், உழைப்பதற்காகவே சாதிகள் தோன்றியுள்ளன. சாதியின் பெயரால் இழிவான செயல்களைச் செய்பவர்கள் இழிவானவர்கள். தன்னையறிந்தவர் இத்தகைய இழிவான செயல்களைச் செய்யமாட்டார்கள். சாத் திரச் சடங்கு முதலானவை சாதி உயர்வை

வலுப்பெறச் செய்கின்றன. அதனால் அவற்றை விலக்குங்கள் என்றும் சித்தர்கள் அறிவுறுத்துகின்றனர், சமூகச்சூழலில் மக்கள் புழங்கும் தெருக்கள்கூட சாதிய மேலாண்மையை நிலைநாட்டும் ஆதிக்கத் தளமாக விளங்குகின்றன. இத்தகைய நிலை மனித சமுதாயத்தில் இடையில் புகுந்ததே. ஆரம்ப காலத்தில் தோன்ற வாய்ப்பில்லை.

**ஆதி பரம்பிரமம் ஆக்குமக் காலையில்**
**சாதிகள் இல்லையடி**

என்ற வரிகளால் சாதி இடையில் வந்தமை தெளிவாகிறது. இடைக் காலத்தில் தோன்றிய சாதி என்னும் தீயசக்தி மனித சமுதாயத்தை ஆட்டிப் படைப்பதைச் சித்தர்கள் விரும்பவில்லை.

சித்தர்கள் சாதியை ஒழிப்பதில் ஓங்கிய குரலுடன் வெகுண்டேழுந்துள்ளனர்.

**“சாதிப் பிரிவினில் தீயை மூட்டுவோம்”**

என்று பாடி பாம்பாட்டிச்சித்தர் சாதி ஒழிப்பில் சமூகப் போராளியாகத் திகழ்கிறார்.

உலகில் வழிவழியாகக் குலத்தொழில் பயிலப்பட்டுச் சமூகம் ஒற்றுமையாக இருந்தது. இதில் ஆரியர்களின் சூழ்ச்சியால் உயர்வு, தாழ்வு கற்பிக்கப்பட்டு இன்னார் இந்த தொழில்தான் செய்யவேண்டும் என்ற கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டன. இதனால் தான் சித்தர்கள் சமூகத்தில் சொல்லப்படும் சாதிப் பெயர்கள் அனைத்தும் பிரிவுகளை ஏற்படுத்தவோ இனங்கண்டு விலகிக் கொள்ளவோ தோன்றியதல்ல, தன்னலக்காரர்கள் தங்கள் வயிற்றுப்பிழைப்புக்காக ஏற்படுத்தினர்

**“தொல்லுலகில் நால்சாதி அநேகம்சாதி**
**தொடுத்தார்கள் அவரவர்கள் பிழைக்கத்தானே”**

என்ற பாடல் வரிகளின் வழி எதன் காரணமாகச் சாதிகள் தோற்றம் பெற்றன என்பதை வால்மீகி கூறுகிறார்.

**“நான் என்றும் நீ என்றும் சாதி பலயென்றும்**
**நாட்டினர் உலகத்தோர் பிழைக்கத் தானே”**

என்ற பாடலில் அகத்தியர் பிறர் பிழைக்கவே சாதிகள் தோற்றம் பெற்றன என்று பதிவு செய்துள்ளார்.

**பற்பல சாதியாய்ப் பாரிற் பகுத்தது**
**கற்பனை ஆகுமடி”**

என்ற பாடலில் சாதி கற்பனையானது. அது மனித சமுதாயத்தைப் பிரித்துப் பிளவுபடுத்துகிறது என்பதைக் குதம்பைச்சித்தர் தெளிவுபடுத்துகிறார்.

**ஏற்றத் தாழ்வுகளைச் சாடுதல்**

சாதிப்பிரிவுகளால் சமுதாயம் பிளவுப்பட்டு மேல். கீழ் என்று பேதப்படுகிறது. மேல்சாதியினர் கீழ்சாதியை ஒதுக்கி விலக்குகின்றனர். இந்தப் பேதங்களை நீக்கி சமநிலைக்குப் பாடுபட்டவர்கள் சித்தர்கள். இதனை,

**பார்ப்பார்கள் மேலென்றும் பறையர்கள் கீழென்றும்**
**தீர்ப்பாகப் படைத்தாரடி**

என்ற பாடலில் குதம்பைச்சித்தர் பாகுபாடுகள் நீங்க வேண்டும் என்று பாடுகிறார். சித்தர்கள் அன்றைய சமுதாயத்தில் நிலவிய வைதீக சமயமும் வருணாசிரமத் தருமமும் அடக்குமுறையாகவும் அருள் வாழ்க்கைக்குத் தடைக்கற்களாகவும் இருந்தமையால் அவற்றை எதிர்த்துப் புரட்சி செய்தனர்.

மாடுகளில் ஒன்றான எருதுகளின் காளையும் பசுவையும் இணையச் செய்தால் இனக்கலப்பால் வேறு உயிர் தோன்றலாம். ஆனால் வேதம் ஓதும் பிராமணனையும் தாழ்த்தப்பட்ட சாதியான புலைச்சியையும் இணையும்படி செய்தால் எந்தவித மாறுபாடுமின்றி கரு உண்டாகும். மனித குலத்திற்குள் சாதி என்பது துளியும் இல்லை. இதனை

**“மேதியோடும் ஆவுமே விரும்பியே புணர்ந்திடில்**
**பேதமாய்ப் பிறக்கிலாதவாறதென்ன பேசுமே”**

**என்று பாடுகிறார் சிவவாக்கியர். மேலும், மனித சமுதாயம் முழுவதும் ஒரே மாதிரியான உடல்களையே பெற்றுள்ளன. அதில் சாதிப் பிரிவுகள் ஏதும் இல்லை. இதனை.**

**"பறைச்சியாவது ஏதடா பணத்தியாவது ஏதடா**
**பறைச்சியும் பணத்தியும் பகுத்துப்பாரும் உம்முளே"**

என்று வினாத் தொடுக்கிறார். உடற்பாகம் அனைவருக்கும் ஒரே அளவினதாக இருக்கும். இதில் சாதிப்பிரிவிற்கென உடலில் ஏதேனும் இலக்கம் கருவில் இருக்கும் பொழுதே சாதி தீர்மானிக்கப்படுகிறது. பிறப்பு என்பது இடப்பட்டுள்ளதா? என்று கேட்கிறார் சிவவாக்கியர். ஒருவன் பிறப்பதற்கு முன்னமே பிறப்புக்கு உரியவனின் உரிமையால் நிகழவில்லை. பிறப்பிற்குரியவனின் பெற்றோரின் உரிமையாலும் நிகழவில்லை. பிறப்பு எனும் செயலைச் செய்யவோ. மாற்றவோ. நிறுத்தவோ பிறப்பிற்குரியவனுக்கு உரிமையில்லை என்பதை அறியமுடிகிறது. இதனால் பிறப்பினால் எந்தச் சாதியில் பிறந்தார் என்று கூறி உயர்வு தாழ்வு கற்பிப்பது அறிவீனமான செயலாகும். வளரும் போது மட்டும் தான் ஒருவன் தனது செயலுக்கு உரிமையும் பொறுப்பும் ஏற்கிறான். இதனால் மனிதனின் பிறப்பின் காரணமாக மதிக்கப்படாமல் அவனது பண்பு, ஒழுக்கம் ஆகியவற்றைக் கொண்டே மதிக்கப்பட வேண்டும் என்பதே பொருத்தமான சிந்தனையாகும்.

பிறக்கும் போது எல்லோரும் வெற்றுடலோடுதான் பிறக்கின்றனர். யாரும் பூணுல், குடுமி, கோவணம் போன்றவற்றோடு பிறப்பதில்லை. வேதசாத்திரங்களை அறிந்து கொண்டும் யாரும் பிறப்பதில்லை எல்லோருடைய மனமும் வெறுமையாகவே இருக்கிறது. இதனால் பிறப்பால் உயர்வு தாழ்வு என்பதில்லை என்று சித்தர்கள் வலியுறுத்துகின்றனர்.

சித்தர் பாடல்கள் சாதிய சித்தாந்தங்களையும் செயல்பாட்டையும் முழுமூச்சாய் எதிர்ப்பது என்ற குறிக்கோளைக் கொண்டமைந்துள்ளன. இதனால் சாதிய ஒடுக்குமுறைக்குப் பலியான அடிமட்ட சமூகங்களிலிருந்து மக்களை மீட்பது சித்தர்களின் நோக்கமாகும். மனிதர்களுக்குள் பேதம் என்பது இல்லை. சாதி. மத இன வேற்றுமை உண்டென்று கூறுவது பொய் என்ற உண்மையை சித்தர்கள் உணர்த்துகின்றனர். மனிதசாதி என்பது ஒன்றுதான் இதை உணராதவர்களே சாதிபேதம் பாராட்டுவர் என்பதை,

**"ஒவ்வாதென் றேபல சாதி -யாவும்**
**ஒன்றென் றறிந்தே யுணர்ந்துறஓதி"**

என்ற பாடல் வரிகளில் பற்பல சாதிகள் இல்லை சாதிகள் அனைத்தும் ஒன்றே என்னும் கருத்தினை கடுவெளிச்சித்தர் குறிப்பிடுகின்றார். மேலும், ஆண் சாதியென்றும் பெண் சாதியென்றும் இரண்டு மட்டுமே மற்றவையெல்லாம் வீணானவை என எடுத்துரைக்கிறார் குதம்பைச்சித்தர்.

**"ஆண்சாதி பெண்சாதி யாரும் இருசாதி**
**வீண்சாதி மற்றவெல்லாம்"**

என்ற பாடலால் அறிவுறுத்துகிறார்.

சித்தர்கள் சமுதாயத்தில் மலிந்து கிடக்கும் சாதி சமயப் பிணக்குகளைப் போக்கியவர்கள். சாதி பேதத்தினை எதிர்க்கும் சித்தர்களுக்குள் சாதி பேதம் இல்லை என்பதை.

**"காணப்பா சாதிகுலம் எங்கட்கு இல்லை.**
**கருத்துடனே என்குலம் சுக்கிலம்தான் மைந்தா!**
**தோணப்பா தோணாமல் சாதிபேதம்**
**சொல்லுவான் சுருக்கமாய் சுருண்டு போவான்"**

என்ற பாடலில் சாதிபேதம் கூறுபவரைச் சுருண்டு போவான் என்று காகபுசண்டர் எச்சரிக்கிறார். சாதிபேதங்கள் மனிதர்களால் ஏற்படுத்தப்பட்டது. அதனால் அதனை எதிர்க்கும்வகையில் சித்தர்கள் முழக்கமிட்டனர். சாதியப் பிரிவுகளை அடியோடு ஒழிப்பதில் முழுமூச்சாக செயல்பட்டவர் தந்தை பெரியார். அவர் ஒரு சாதியினர் உயர்ந்தவர் ஒரு சாதியினர் தாழ்ந்தவர் எனக் கூறுவது இழிவானது என்கிறார். அவர் கூறுகையில்,

சாதி வேற்றுமை பிரிவு ஆகியவை ஒழிந்தால்தான் சமுதாய வாழ்க்கையில் சமதருமமாய் மனிதன் வாழமுடியும் என்று கூறுகிறார்.

## முடிவுரை

தமிழ் இலக்கியப் பாடுபொருள் வரலாற்றில் ஆகப்பெரும் புரட்சிகளைச் செய்தவர்கள் சித்தர்கள். தமிழிலக்கியத்தில் அதுவரை சரியெனப் போதிக்கப்பட்டு வந்த தவறான கருத்துக்களை எதிர்த்து நியாயக் குரல் எழுப்பியவர்கள் சித்தர்கள்.

சமயத்துறையில் சித்தர்கள் புரட்சி செய்தமையால் சமயவாதிகளால் தூற்றப்பட்டனர். சுயநலம் கருதிய சமயவாதிகள், சமயச் சண்டைகளுக்கும் சச்சரவுகளுக்கும் காரணம் பிறசமயங்களைப் பற்றிய அறியாமையும் தம் சமயமே உயர்ந்தது என்ற குறுகிய கண்ணோட்டமுமே ஆகும். சமயம் மனிதனது அச்சத்தையும் ஏக்கத்தையும் போக்கி அன்பையும் நம்பிக்கையையும் வேண்டும். அன்பை மட்டுமே வலியுறுத்தும். இவ்வகைச் சமயத்தையே சித்தர்கள் ஆக்க முனைந்தனர்.

சித்தர் பாடல்கள் சாதியத்தையும் சாதிய செயல்பாடுகளையும் முழுமூச்சாய் எதிர்த்துள்ளனர். சாதிய ஒடுக்குமுறைக்குப் பலியான மக்களை மீட்பதே சித்தர்களின் நோக்கமாக இருந்திருக்கிறது. மனிதர்களுக்குள் பேதம் என்பது இல்லை. சாதி, மத இன வேற்றுமை உண்டென்று கூறுவது பொய் என்ற உண்மையை சித்தர்கள் உணர்த்தியுள்ளனர்.

## துணைநூற்பட்டியல்


1. தமிழ்ப்பிரியன் - சித்தர் பாடல்கள் (மூலமும் உரையும்), கற்பகம் புத்தகாலயம், சென்னை, 2016.
2. முருகேசன் சி.எஸ் - சித்தர் பாடல்கள் (பெரிய ஞானக்கோவை), சங்கர் பதிப்பகம், சென்னை, 2004
3. ஆனந்த ரவிசாஸ்திரி, க.ஆ.- சித்தர்களின் சமுதாயச் சிந்தனைகள், பாவை பப்ளிகேசன்ஸ், சென்னை, 2008.
4. குணசேகரன். சு. - முற்போக்குச் சிந்தனையில் சித்தர்கள், சென்னை, 2009
5. குன்றக்குடி அடிகளார் - நமது நிலையில் சமயம், சமுதாயம், சென்னைப் பல்கலைக்கழகம், சென்னை, 1990
6. கைலாசபதி.க - ஒப்பியல் இலக்கியம், பாரி நிலையம், சென்னை, 1990.
7. சுயம்பு. பெ, இந்தியாவில் சமயங்கள், ஸ்ரீவிக்னேஷ் பதிப்பகம், சென்னை, 2013
8. தட்சணாமூர்த்தி. அ - தமிழர் நாகரிகமும் பண்பாடும், யாழ் வெளியீடு, சென்னை -1994
9. தேசிக விநாயகம் பிள்ளை, ஆசியஜோதி, பாரி நிலையம், சென்னை -1998.
10. பக்தவத்சலபாரதி, பண்பாட்டு மானிடவியல், மணிவாசகர் பதிப்பகம், சென்னை-2000.
11. Hulton. J.H & Caste in India, Oxford university Press, Bombay, 1983